# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 55 பிரசோற்பத்தி தை 07 (21.01.1992) செவ்வாய்


புதிதாகக் கொள்வனவு செய்த

## கடற்படை படகுகளில் கோளாறு சீனப் பொறியியலாளர் விரைவு

150 மில்லியன் ரூபாவுக்கு ஸ்ரீலங்கா கடற்படையினரால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தம் புதிய மூன்று சீன கடற்படைப்படகுகள் என்ஜின் கோளாறு காரணமாக திருமலையில் ஒதுக்கப்பட்ட இடத்தில் தரித்து நிற்கின்றன

1989ஆம் ஆண்டு கொள்வனவான இக்கடற்படை படகுகள் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதமே இலங்கை வந்திருந்தன

இவை இதுவரை எந்த கடற்படை நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தமுடியா நிலையில் நிற்பதாக தெரியவருகிறது.

இதேவேளை இது குறித்து ஆராய நான்கு சீன பொறியியலாளர்கள் கடந்த புதன் திருகோணமலை வந்துள்ள

—04 ஆம் பக்கம் பார்க்க

# அகதிகள் புறப்பட்ட கப்பலுடன் இந்திய கொமாண்டோப் படை!

## திருமலையிலிறங்க அனுமதிக்கப்படுவரா?

சென்னை துறைமுகத்திலிருந்து நேற்று திருகோணமலை புறப்பட்ட இலங்கை அகதிகள் கப்பலுடன் இந்தியக் கடற்படையின் ரோந்துக்கப்பல் ஒன்றும் திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நண்பகல் சென்னை துறைமுகத்திலிருந்து முதல் கட்டமாக 614 இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குச் சொந்தமான எம். வி. அக்பர் என்ற கப்பலில் புறப்பட்டனர்.

நேற்றுப் புறப்பட்ட அகதிகள் கப்பலுடன் இந்தியக் கடற்படையின் 'கங்கா தேவி' என்ற ரோந்துக்கப்பல் ஒன்றும் புறப்பட்டுள்ளது.

இந்த இந்திய கடற்படை கப்பலில் சுமார் 30 இந்திய கொமாண்டோப் படையினர் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியக் கொமாண்டோப் படையினர் திருமலையில் இறங்க அனுமதிக்கப்படுவாரா அல்லது இந்தியாவின் பயணிகள் கப்பலான அக்பருக்கு

— 04 ஆம்பக்கம் பார்க்க

## ஷெல் தாக்குதல் இருவர் காயம்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் படையினர் மாவிட்டபுரம் பகுதியை நோக்கி மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் இருவர் பலத்த காயத்திற்குள்ளாகிய நிலையில் சிகிச்சைக்காக யாழ்

—04ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் வரவும் திட்டம்

## கனேடிய மனித உரிமைக்குழு நாளை இலங்கை வருகிறது

ஒன்பது பேரடங்கிய கனேடிய மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவொன்று நாளை 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை இலங்கையில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இக் குழுவின் அறிக்கையிலேயே ஸ்ரீலங்கா மீதான கனடாவின் எதிர்கால நடவடிக்கைகள் தங்கியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்பாக இங்குள்ள நிலைமை அறிந்தாலே கூட்டத்தின் போது தாம் எடுக்கும் நட

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிரான்குளம் கண்ணிவெடி நீதிபதி படுகாயம்

மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் நேற்று இருவாகனங்களிடையே கண்ணிவெடியொன்று வெடித்ததில் வாகனம் ஒன்றில் சென்ற ஏழுபேர் படுகாயமடைந்தனர்.

திருமலை நீதிபதி சுவர்ணராஜா மற்றும் அவருடன் சென்ற 6 பொலிஸாருமே காயமடைந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## அனுராவிடம் மன்னிப்பு கேட்கிறது டில்லி ஹோட்டல் அசோக்

அனுரா பண்டாரநாயக்கா புதுடில்லியில் தங்கியிருந்த போது ஹோட்டல் அசோக்கிற்கு பணம் செலுத்தாது குறித்து அந்த ஹோட்டல் அவருக்கு 'பில்' அனுப்பியிருந்ததல்லவா.

இப்போது அதற்காக ஹோட்டல் அசோக் அனுராவிடம் மன்னிப்புக் கோரியுள்ளது

—04 ஆம் பக்கம் பார்க்க

உதவி வழங்கும் நாடுகளின்

## பாரிஸ் மகாநாட்டிற்கு பிரதமர் குழு விஜயம்

அடுத்த மாதம் பிரான்சின் தலைநகர் பாரிஸில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பிரதமரும் நிதியமைச்சருமான டீ பி விஜயதுங்கா தலைமையிலான தூதுக்குழு கலந்து கொள்கின்றது

இலங்கைக்கு எவ் வகையான உதவிகள் பெறப்படும் என்பதை பாரிஸ் போன பின்னரே அறியமுடியும் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## மேலும் ஒரு சிப்பாய் படுகாயம்

## அம்பாறை அதிரடிப்படை 'காட்டுப்புயல்' நடவடிக்கை

அம்பாறை காட்டுப்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொள்ளும் ஒப்பரேஷன் 'ஜங்கிள் ஸ்ரோம்' (Jungle Storm) நடவடிக்கையில் நேற்றும் அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஏற்கனவே இந்நடவடிக்கையில் சார்ஜன்ட் தரத்திலுள்ள அதிகாரியும் 4 அதிரடிப்படை சிப்பாய்களும் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## எயர்லங்கா விபத்துக்கு நாசவேலை காரணமில்லையாம்

அண்மையில் சென்னையில் நடைபெற்ற எயர்லங்கா விமான விபத்துக்கு நாசவேலை காரணம் என்பதை மறுக்கின்றனர் எயர்லங்கா நிறுவன உயரதிகாரிகள்.

எதுவும் இறுதி அறிக்கை வந்த பின்னரே தெளிவாக கூறமுடியும் எனத் தெரிவித்துள்ள அவர்கள், முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டதாக தெரிவித்தனர்.

## இந்திய விமான சேவைக்கு குத்தகைக்கு விமானங்கள்

எயர் லங்கா விமானம் ஒன்று சென்னையில் தீப்பற்றியதையடுத்து திருவனந்தபுரம், திருச்சி விமான சேவைக்கு பி 737 விமானம் லங்கா இட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விமானத்தைக் குறுகிய கால குத்தகைக்குப் பெற எயர் லங்கா நிறுவனம் முயற்

## பொலிஸாரின் உறவினர்வர

## திலகர் பேட்டி:

## உதவி வழங்கும் கூட்டத்தை உன்னிப்பாக கவனிக்கிறோம்

## பொலிஸாரின் உறவினர்
## அனுமதி மீண்டும் மறுப்பு

யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 ஸ்ரீலங்காப் பொலிஸாரின் உறவினர்கள் இங்குவர பாதுகாப்பு அமைச்சு மீண்டும் அனுமதி மறுத்துவிட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மீளவும் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டபோதே இம்மறுப்பு தெரிவிக்கப்பட்ட

—04 ஆம் பக்கம் பார்க்க

## பௌத்த யாத்திரிகர்களுக்கு கப்பல் சேவை

இந்தியாவுக்கு பௌத்த சிங்கள மக்கள் குறைந்த செலவில் யாத்திரையை மேற்கொள்ளும்முகமாக கொழும்புக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் கப்பல் சேவையொன்றினை ஆரம்பிக்கும்படி இந்திய வெளியுறவுச் செயலர் திரு. பேர்நாட் திலகரட்னா இந்திய அரசைக் கோரியுள்ளார்

—04 ஆம் பக்கம் பார்க்க

### பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதம்

## மீண்டும் விவசாயிகளுக்கு வழங்க அதிகாரிகள் மறுப்பு

ஜே. வி. பி. நடவடிக்கை காலங்களில் தெற்கிலுள்ள விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட துப்பாக்கிகளை திருப்பிக்கொடுக்க பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

ஆயுதங்களை மீளவும் விவசாயிகளிடம் கொடுப்பதன் மூலம் அது மீண்டும் தவறான கைகளுக்கு சென்றுவிடும் என அஞ்சுகிறோம் எனக்

—04 ஆம் பக்கம் பார்க்க

புரம், திருச்சி விமான சேவைக்கு பி 737 விமானம் ஒன்றைப் பயன்படுத்த எயர் கால குத்தகைக்குப் பெற எயர் லங்கா நிறுவனம் முயற்

...04 ஆம் பக்கம் பார்க்க

## நவாந்துறைமீனவர்களும் கடலில் வைத்து கைது

கடலில் மீன் பிடிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்த நாவாந்துறையைச் சேர்ந்த கருப்பையா சுப்பையா, அந்தோனிப்பிள்ளை அன்ரனி யோசப்பு ஆகிய இரு மீனவர்களும் இதுவரையும் வீடு திரும்பவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர்'

இவர்கள் படையினரால்

— 04 ஆம் பக்கம் பார்க்க

### ஜெனரல் ஹமில்டன் சொல்கிறார்

# புலிகளின் மலேசியா தளம்; விசாரணை நடக்கிறதாம்

''மலேசியாவில் விடுதலைப் புலிகளுக்கு தளம் உண்டா என்பது குறித்து இதுவரை எமக்கு எதுவும் தெரியாது எனினும் மலேசியாவிலிருந்து ஆயுதங்கள் புலிகளுக்கு கிடைப்பதாக புலனாய்வு அறிக்கைகள் கூறுகின்றன'' என கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வணிங்க தெரிவித்துள்ளார்.

''மலேசியாவில் புலிகளின் நடவடிக்கை குறித்து எமது அரசு மலேசியா அரசுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளும் எனக் குறிப்பிட்ட ஹமில்டன் இது குறித்து மலேசியப் பொலிஸ் விசாரணை நடத்துவதாகவும் குறிப்பிட்டார்.

## உன்னிப்பாக கவனிக்கிறோம்

சோவியத் யூனியனில் நடைபெற்றதை ஸ்ரீலங்கா அரசு படிப்பினையாக கொள்ள வேண்டும் என விடுதலைப் புலிகளின் பிரமுகர் லோரன்ஸ்திலகர் லண்டனில் இருந்து வெளிவரும் 'தமிழன்' என்ற சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் சமரஸ பேச்சு வார்த்தைகளுக்கு எதிரானவர்களல்ல சமரஸ பேச்சு

...04 ஆம் பக்கம் பார்க்க

### அமைச்சர் ரணில்

## லலித்தின் குடியுரிமையை பறிக்கும் எண்ணம் இல்லை

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் குடியுரிமையைப் பறிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

அத்துலத் முதலியின் குடியுரிமையைப் பறிக்கப்படும் என 'ஐலண்ட்' பத்திரிகையில் வெளியான செய்தியையும் அவர் மறுத்துள்ளார்.

## என் நடவடிக்கை யாவும் கண்காணிக்கப்படுகின்றன

தேசிய புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவரின் தலைமையில் இயங்கும் கண்காணிப்புக்குழு ஒன்று தன்னை வேவு பார்ப்பதாக

—04 ஆம் பக்கம் பார்க்க

மூலாதார பாடசாலை முறை இல்லாது போகிறது

இரு கொத்தணிகள் ஒன்றாக இணையும்

நிறைவேற்று அதிகாரமுள்ள தனி அதிபர்கள் நியமனமாவர்

# கொத்தணி முறையில் புதிய மாற்றம்

# விரைவில் அமுலுக்கு வருகிறது!

கொத்தணி முறையில் பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

புதிய முறையின்படி இரண்டு கொத்தணிகளை இணைத்து அவற்றுக்கு நிறைவேற்று அதிகாரமுள்ள கொத்தணி அதிபர் ஒருவர் நியமிக்கப்படுவார் இதன் படி இனிமேல் மூலாதாரப் பாடசாலையென ஒன்று இருக்காது சகல பாடசாலைகளினதும் நிர்வாகத்துக்கும் என தனியே வேறொரு அதிபர் நியமிக்கப்படுவார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள கொத்தணி அதிபர் இத் திட்டத்தின் கீழ் எவ் விதத்திலும் பாடசாலை ஒன்றில் அதிபராகக் கடமையாற்ற மாட்டார்.

ஏறத்தாள இருபது இருபத்தைந்து பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் விதத்தில் மத்தியில் கொத்தணி அதிபரது அலுவலகம் அமைந்திருக்கும்.

தற்போதுள்ள கொத்தணி மூலாதாரப் பாடசாலையில் அதிபராகவுள்ள பல அதிபர்கள் தமது அங்கத்துவப் பாடசாலைகளை சமமான முறையில் நோக்காமையாலும், கல்வி வளங்களைத் தேவைக்கேற்ப சரியாகப் பகிர்ந்தளிக்காமையாலுமே இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மூலாதாரப் பாடசாலையில் அதிபர் கடமைபுரியும் அதேநேரம் ஏனைய அங்கத்துவப் பாடசாலைகளையும் மேற்பார்வை செய்ய வேண்டிய நிலை கொத்தணி அதிபருக்குள்ளதால் மூலாதாரப் பாடசாலையின் நிர்வாகத்தையும், ஏனைய அங்கத்துவப் பாடசாலைகளின் மேற்பார்வையையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாமையாலும் இம் முறையில் மாற்றம் செய்யப்படவுள்ளமைக்கு மற்றொரு காரணமெனவும் சொல்லப்படுகிறது.


உங்கள் அடுத்த உணவு வேளைக்கு விஜயம் செய்யுங்கள்

ஜெசித்தாரா உள்ளூர் உணவகம்

19/3கொழும்புத்துறை-சாலை,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டிக்குளி

01053


## கந்தபுராண படிப்பு

பருத்தித்துறை சிவன் கோவிலில் கடந்த ஞாயிறு கந்தபுராணப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டது

இக்கந்தபுராணப் படிப்பு மூன்று மாதங்களுக்கு நடைபெறவுள்ளது. 11

## திருமலை தமிழ்ப் பகுதிகளில் அஞ்சல் சேவை பாதிப்பு!

திருகோணமலையில் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமுற்ற நான்கு உப தபால் அலுவலகங்கள் இன்னும் இயங்காமலுள்ளன.

நிலாவெளி, குச்சவெளி, கும்புறுப்பிட்டி, கன்னியா ஆகிய தமிழ்ப் பகுதிகளிலுள்ள நான்கு உப தபால் அலுவலகங்களுமே மீண்டும் திறக்கப்படாமல் மூடப்பட்டுள்ளன.

இவ் உபதபால் அலுவலக ஊழியர்கள் திருமலை பிரதம தபாலகத்திலேயே கடமையாற்றி வருகின்றனர். (14)

## இராணுவ அதிகாரி சாட்சியம்

"விதியோரத்தில் கிடந்த சடலங்களை குழியில் போடுமாறு எனது வீரர்களுக்குப் பணித்தேன். பின்னர் அருகில் காணப்பட்ட டிராக்டர், ரயர்கள், இரண்டையும் தடி, தண்டுகளையும் சேர்த்து அவற்றிற்குத் தீ மூட்டினோம்'

இவ்வாறு கொக்கட்டிச்சோலை படுகொலைகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணையில் சாட்சியமளித்த லெப்டினன்ட் சுசந்த குடலிகம கூறினார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## கற்பூரவில்லைகளாக மாறிய சவர்க்காரக் கட்டிகள்!

சவர்க்காரங்களுக்குள் கற்பூரவில்லைகளைக் கடத்தி வர முயற்சித்ததாகக் கூறப்படும் நபர் ஒருவர் வவுனியா தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.

1200 சவர்க்காரக் கட்டிகள் இதற்குப் பயன்படுத்தப் பட்டனவாம்.

அவை பறிமுதல் செய்யப் பட்டன.

## செயலகம் செயலிழப்பு

முல்லைத்தீவுக்கச்சேரி செயலிழக்கும் நிலை உருவாகியுள்ளது 90 வீதமான ஊழியர்கள் கச்சேரியில் இல்லாத நிலையில் கச்சேரி வேலைகள் ஸ்தம்பிதமடைந்து வருகின்றன.

தற்போது முல்லைத்தீவுக் கச்சேரியில் பத்து வீத ஊழியர்களே கடமையாற்றி வருவதாகவும், இதனால் அங்கு வேலைகள் யாவும் மந்தகதியிலேயே நடைபெறுவதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார், 14

## பனையோலைப் பயிற்சி நெறி; தற்பொழுது விண்ணப்பிக்கலாம்!

பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் 50 பேருக்கான பனையோலைப் பயிற்சி நெறி ஒன்று மிக விரைவில் வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கப் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

இந்தப் பயிற்சி நெறியைப் பயில்வதற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது எனவும் பயில விரும்புவோர் சங்கப் பணிமனையுடன் கடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் சங்கத் தலைவர் செ உருத்திரா கேட்டுள்ளார். (04)

## ஜனசக்தி உதவியை நிறுத்திய கிராமசேவையாளர் வெட்டிக் கொலை

கடந்த மூன்று மாதகாலமாக இடைநிறுத்தி வந்த ஜனசக்தித்திட்ட உதவியை நிறுத்தியதாகக் கூறி கிராம சேவையாளர் ஒருவர் சவரக் கத்தியினால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தெற்கில் வெலிப்பிட்டிய என்ற கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் அப்பகுதி கிராம சேவையாளரான கே. தொன் கருணா சேன (38) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## இரண்டு பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையில்

வடமராட்சி கிழக்கில் இராணுவநடவடிக்கையை அடுத்து இரண்டு பாடசாலைகள் இயங்கமுடியாது தொடர்ந்தும் மூடப்பட்டுக்கிடக்கின்றன.

பத்தில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயமும், மாமுனை அரசினர் த. க. வித்தியாலயத்திலும், வெற்றிலைக்கேணி றோ. க. த. க. வித்தியாலயமும் இந்தக்


சுண்டிக்குளியில் மக்களின் நலன் கருதி நடைபெறுகின்றது

நியாய விலைச் சந்தை

உங்களுக்குத் தேவையான சகல வித வீட்டுப் பாவனைப் பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

நியாய விலைச் சந்தை

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை
19/3 கொழும்புத்துறைச்சாலை, சுண்டிக்குளி.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01049



நெல்லியடியில் உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றது

நியாய விலைக் கடை

வங்கி அருகில், நெல்லியடி.

வடமராட்சி மக்களின் நன்மை கருதி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கின்றது

நெல்லியடி
நியாய விலைக் கடை

மொத்த, சில்லறை விற்பனை நிலையம்.
நெல் மற்றும் உபதானியங்களைக் கொள்வனவு செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஒரு முறை விஜயம் செய்து உங்கள் சந்தேகத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்.

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ எகட்டன்

01057

01057


கோக்குவில் மக்களுக்கு
ஓர் நற்செய்தி

**நியாய விலை தேங்காய் கடை**

தேங்காய்,
தேங்காய் மட்டை,
மூரி மட்டை,
விறகு ஆகியவற்றை

இல்லத்தரசிகளின் நாளாந்தத் தேவைகளுக்கு

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

**நியாய விலை தேங்காய் கடை**

பொற்பதி வீதி,
(கொக்குவில் பழைய புகையிரத நிலைய சந்தி)
கொக்குவில்.

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01052


தும் முடப்பட்டுக்கிடக்கின்றன.

மருதன்கேணி இந்து தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் உடுத்துறை மகா வித்தியாலயமும், தாளையடி றோ. க. வித்தியாலயத்தில் கடைக்காடு றோ. க. வித்தியாலயமும், செம்பியன்பற்று வடக்கு றோ. க. வித்தியாலயத்தில் ஆளியவளை சி. சி. தமிழ்க் கலவன் வித்தியாலயமும், செம்பியன்பற்று தெற்கு அரசினர் த. க. வித்தியால நிலைக்கேணி றோ. க. த. க. வித்தியாலயமும் இந்தத் தவணை ஆரம்பம் முதல் இயங்கிவருகின்றன.

ஆனால் வடமராட்சி கிழக்கு இழக்கெகிலையில் அமைந்துள்ள போக்கறப்பு சி. சி. த. க. வித்தியாலயமும், கேவில் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயமும் எந்த ஒரு இடத்திலும் இயங்கமுடியாத நிலையில் முடிக்கிடக்கின்றன. (27)

## 'கொலம்பஸ் போட்டி' 20 ஆயிரம் மைல்கடந்து 32 படகுகள் காலி வந்தன!

கொலம்பஸ அமெரிக்காவைக் கண்டு பிடித்து 500 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு உலக நாடுகளிடையே 1991 ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட படகுப் போட்டி கடந்த 11 ஆம் திகதி காலித்துறைமுகத்தில் முடிவடைந்தது

கடந்த வருடம் ஸ்பானிய ஐயரேக்டல் துறைமுகத்திலிருந்து ஆரம்பமான இப்படகுப்போட்டியில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த 32 படகுகள் பங்குபற்றின இந்தப் படகுகள் 13 துறைமுகங்களை அடைந்து 20 ஆயிரம் மைல்களைக் கடந்து காலித்துறைமுகத்தை வந்தடைந்தன.

பிரித்தானியா, அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன், சுவிர்ச்சிலாந்து, பின்லாந்து, பெல்ஜியம், ஹங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 180 மாலுமிகள் இந்த 'ஐரோப்பா 92' போட்டியில் பங்கு பற்றினர்


கொடிகாமம் மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!
மக்களுக்கு நியாயவிலையில் பொருட்களை கிடைக்கச் செய்ய வழிவகுக்கின்றது.

**நியாய விலைக் கடை**
புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்

உங்களுக்குத் தேவையான சகல மனைப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**நியாய விலைக் கடை**
புகையிரத நிலைய முன்பாக
கொடிகாமம்.

நெல் மற்றும் உபதானியங்கள் கொள்வனவு செய்வோர் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

தேசிய உற்பத்திகளைப் பாவித்து
தமிழ் தேசியத்தைப் பாதுகாப்போம்

விளம்பர அமைப்பு:
செனித் ஜோ. எகட்டன்

01050

இ. தொ. கா. பேச்சாளர் அறிவிப்பு :

# யாழ். விஜயத்தை தொண்டா கைவிடவில்லை

# தெரிவுக்குழு முடிவுக்கே காத்திருக்கிறார்

''விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு யாழ் செல்ல உத்தேசித்திருந்த அமைச்சர் தொண்டமான் தனது விஜயத்தை கைவிட்டுவிட்டாரா?

'இல்லவே இல்லை' என்று இதனை இ. தொ. கா. பேச்சாளர் ஒருவர் பலமாக மறுத்துள்ளார்.

''இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிவகைகளைத் தேட நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் அமைச்சர் தொண்டமான் ஏதோ ஒரு முடிவுவரும் வரை பொறுத்திருக்கிறார்' என்றும் அப்பேச்சாளர் கூறினார்.

''அமைச்சர் தனது சமாதான நடவடிக்கைகளை ஆரம்பித்த போது பாராளுமன்றத் தெரிவுக் குழு தனது நடவடிக்கைகளைத் தொடங்கி விட்டது. எனவே இறுதியில் எது சரி வருகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம்'' என்றும் அப்பேச்சாளர் சொன்னார்.

''பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைச்சரின் யோசனையை ஆராயுமென எதிர்பார்க்கப்படுகின்றது'' என்று குறிப்பிட்ட அப்பேச்சாளர், விமர்சகர்களின் விருப்புக்கு ஏற்ப பேரம் பேசக் கூடிய ஒரு பொருளல்ல அமைச்சர் தொண்டமான் என்பதனை அவ்விமர்சகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் காரசாரமாகத் தெரிவித்தார்.

---

கைக்கு எட்டாத பதக்கங்கள்

## 'உதை'படும் உதைபந்தாட்ட வீரர்கள்!

அண்மையில் கொழும்பில் நடந்து முடிந்த சாவ் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய இலங்கை அணிகள் எல்லாம் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களில் ஏதோ ஒன்றினைப் பெற்றிருக்கின்றன

ஆனால் பரிதாபம்... இலங்கை உதைபந்தாட்ட அணியினால் எந்தப் பதக்கத்தையுமே தனதாக்கிக் கொள்ள முடியாது போய் விட்டது எட்டு மாத காலமாகப் பிற நாட்டுப் பயிற்சியாளர்களினால் பயிற்றுவிக்கப்பட்டதும் அல்லாமல் சாவ் இறுதி ஆட்டம் வரையாவது வர வேண்டும் என்பதற்காக உதைபந்தாட்டத்தில் பிரபல்யம் பெறாத நேபாளம், மாலைதீவு அணிகளுடன் முதலில் ஆட இலங்கை அணிக்கு வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் இலங்கை அணியால் நின்று பிடிக்க முடியவில்லை. இரண்டாவது ஆட்டத்திலேயே வெளியேற்றப்பட்டு விட்டது.

'இலங்கை உதைபந்தாட்ட அணிக்கும் கொடுத்த பயிற்சியை நாய்களுக்குக் கொடுத்திருந்தாலும் அவை ஒரு பதக்கத்தையாவது பெற்றிருக்கும்' எனச் சிங்கள விளையாட்டுத்துறை இதழ் ஒன்று பச்சையாக விமர்சித்துள்ளது. (16)

---

## 'யுத்தம் நீடிப்பது - எதிர்காலத்தில் பெரும்விளைவையே ஏற்படுத்தும்'

ஜே. வி. பி. பயங்கரவாதத்துடன் வடக்குக் கிழக்குப் பிரச்சினையை ஒப்பிட முடியாது. அதேபோல தெற்குப் பயங்கரவாதத்தை ஒழித்தது போல வடக்குப் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்த்துவிடவும் முடியாது என சப்ரகமுவ மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் எச். ஆர் மித்ரபால, சப்ரகமுவ மாகாண சபையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

'வடக்குக் கிழக்குப் பிரச்சினை இராணுவத் தீர்வு சாத்தியப்படாது யுத்தத்தை நீடிப்பது எதிர்காலத்தில் பெரும் விளைவை ஏற்படுத்தும் எனவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## பஸ்வண்டியை தேடி மோதிய இராணுவ லொறி

### 15 பேர் ஆஸ்பத்திரியில்

இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற லொறி ஒன்றும் வேறு ஒரு லொறியும் ஒன்றை யொன்று முந்திச் செல்ல முயன்றபோது இ. போ. ச பஸ் ஒன்றுடன் மோதியது.

கம்பளையில் நிகழ்ந்த இச் சம்பவத்தில் 15 பேர் காயமடைந்தனர்.

## யாழ்தேவி பயணி வவுனியாவில் திடீர்மரணம்

கடந்த வெள்ளிக்கிழமை யாழ் வருவதற்காக கொழும்பிலிருந்து யாழ் தேவியில் வவுனியா வந்த பயணி ஒருவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அன்று மரணமானார்.

மூளைக்காய் நாகராசா (67) என்றும் இவர் கரவெட்டி துன்னாலை தெற்கைச்சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## பணியாளர்களுக்கான கல்விச் சேவை நல்லூரில் நேற்று ஆரம்பம்!

பணியாளர்களுக்கான கல்விச் சேவையொன்றை நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பித்துள்ளது.

யாழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ. லிங்கநாதன் தைப்பூச தினமான நேற்றுக்காலை இப்பயிற்சி நெறியை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பிலுள்ளபல பெரிய நிறுவனங்களிலும் இத்தகைய நலச்சேவை உள்ளதாக அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இதன் மூலம் நல்லூர் சங்கம் இங்குள்ள மற்றைய சங்கங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது எனவும் தெரிவித்தார்.

சோ. பத்மநாதன், தொழிற்சங்கப் பிரதிநிதி இ. கனகலிங்கம் ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

வடபிராந்திய வர்த்தக ஊழியர்க்கு

போயாவுக்குப் பதில்

## இந்து விடுமுறைகள்!

வடபிராந்திய வர்த்தக ஊழியர்கள் சங்கம் வருடத்தில் வரும் போயா விடுமுறைகளுக்குப் பதிலாகப் பன்னிரெண்டு இந்து விடுமுறை தினங்களை வர்த்தக ஊழியர்களுக்குரிய விடுமுறை தினங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது

இதன் ஒரு அங்கமாக யாழ்.

## கரடி, பன்றிகளுடன் 'மோதும்' பணி இவர்களுக்கு

வடக்கு கிழக்கு எல்லைப் பகுதிகளில் சேவையிலீடுபடுத்

வர்களுக்கு கும்புக்கையிலுள்ள ஊர்காவல்படை பயிற்சி முகா

---

# இருதயநோயைத் தவிர்க்க

## கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்தவும்

சமீப காலமாக இருதயநோய் தாக்குதலால் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது.

இரத்த நாளங்களில் ஏற்படும் இரத்த ஓட்டத் தடையினால் இருதயத் தாக்குதல் ஏற்படுகின்றது. இரத்தத்தில் காணப்படும் கொலஸ்ட்ராலின் அளவு மிகுந்த நிலையில் அவை இரத்த நாள உட்சுவர்களில் ஊடுருவிச் சென்று சுவர்களின் கடினத்தன்மையை உண்டாக்குகின்றது. இதனால் இரத்த ஓட்டத்தில் தடை உண்டாகிறது.

பெரும்பாலும் இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவு அதிகரிக்கும்போது கொரனரி இருதயநோய் ஏற்படுகிறது.

பொதுவாக கொழுப்புச்சத்துள்ள உணவுப் பொருள்களை அதிகம் உண்பதால் இருதய நோய் ஏற்படுகிறது. உடல் பருமன் உள்ளவர்களுக்கும் இருதயத் தாக்குதல் ஏற்படுகின்றது. இதனைத் தேகபயிற்சி மூலம் நிவர்த்தி செய்யலாம்.

கொழுப்பு வகை உணவுப் பொருள்கள், மரபுவழிக் கூறுகள், மதுபானங், சிகரெட் ஆகியன இரத்தக் கொலஸ்ட்ரால் அளவை அதிகரிக்கச் செய்கின்றன.

உடல் நலத்துக்கு மிக முக்கியமானது கொலஸ்ட்ரால். எலும்புகளைக் கட்டுவதற்கு, பாலியல் ஹோர்மோன்களை உருவாக்குவதற்கு உடலின் இறுக்க உணர்வைச் சமநிலைப்படுத்துவதற்கும் உதவுகிறது நம்மால் கொலஸ்ட்ரால் இன்றி வாழவே முடியாது எனினும் இது அளவுக்கு மீறி உடலில் சேர்ந்து விட்டால் அதுவே உடலுக்குக் கொடிய அச்சுறுத்தலாகவும் மாறிவிடுகிறது.

ஒருவருக்குள்ள இதய இரத்த நாள நோயின் வளர்ச்சி அபாயத்தைத் தீர்மானிப்பதில் இரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவுதான் மிக முக்கியமான ஒரே காரணியாக உள்ளது ஒருவருடைய இரத்தக் கொலஸ்ட்ராலின் அளவில் ஏற்படும் 60 பாயிண்ட் உயர்வு இதய நோயினால் இறக்கும் அபாயத்தை அதிகமாக்குகிறது.

சமீபத்தில் இது பற்றிய பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டது. இலேசான நெஞ்சுவலியெனச் சிகிச்சைக்கு வந்த 700 பேரின் இரத்த நாளங்கள் நிலை பற்றி வரைபடங்கள் சேகரிக்கப்பட்டன. இவர்கள் அனைவரும் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் அவர்களது இரத்த நாளங்கள் உள்ளுக்குள்ளேயே மூடி இரத்த ஓட்டத்திற்குத் தடை உண்டாக்குகின்ற அளவுக்கு அவர்களது இரத்தத்திலுள்ள கொலஸ்ட்ராலின் அளவு நேரடியாகத் தொடர்பு உள்ளதை எக்ஸ்-ரே படங்கள் காட்டின.

கொலஸ்ட்ரால் பற்றிய ஆய்வின் முடிவுகள் தெளிவாக இருந்தன. எந்த வயதுடையவர்களாக இருப்பினும் நாளங்கள் மூடிப் போவதற்கு அவர்களது இரத்தக் கொலஸ்ட்ராலின் அளவே முக்கிய காரணியாக இருந்தது.

இரத்த நாளங்கள் பாதிப்படையாது இருப்பதற்கு இரத்தக் கொலஸ்ட்ராலின் அளவு 160 மில்லிகிராம் வீதத்துக்கு இறங்கி வர வேண்டும். அல்லது அதற்குக் கீழேயே இருக்க வேண்டும்.

எனவே கொலஸ்ட்ராலின் அளவைக் கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பது நன்று. நாளொன்றுக்கு எங்கள் உணவிலுள்ள கொலஸ்ட்ராலின் அளவு 100 மில்லிகிராம் அல்லது அதற்குக் குறைவாக இருப்பது நல்லது.

இயற்கையான தாவர உணவுகள் நன்மை பயக்கும். அவை ஆற்றலையும், சக்தியையும் அளிப்பவை. அவற்றில் உள்ள இயற்கையான நார்ப் பொருள்கள் இரத்தக் கொலஸ்ட்ராலைக் குறைக்க உதவுகின்றன தாவர வகையறாக்களில் கொலஸ்ட்ராலே கிடையாது பழங்கள், காய்கறிகள், தானியங்கள் போன்றவை கொலஸ்ட்ரால் அற்றவை.

## கரடி, பன்றிகளுடன் 'மோதும்' பணி இவர்களுக்கு

வடக்கு கிழக்கு எல்லைப் பகுதிகளில் சேவையிலீடுபடுத் தப்படும் ஊர்காவல் படை யினருக்கு வெகுவிரைவில் காட்டுப் பகுதிகளில் விவசாயி களின் விளைச்சலை அழித் தொழிக்கும் கரடிகள், பன்றி கள் மற்றும் காட்டு மிருகங் களை வேட்டையாடும் பணி யும் வழங்கப்படவுள்ளது.

பயிர் பாதுகாப்பும் பிரிவு என்ற புதிய பெயரின்கீழ் இதர பண மயப்படுத்தப்படும் ஊர் காவல்படையினர்களே இதற் பணியில் ஈடுபடுத்தப்படவுள் ளனர்.

பயிர் பாதுகாப்பும் பிரிவு அண்மையில் உருவாக்கப்பட் டது. இப்பிரிவின் அங்கத்த வர்களுக்கு கும்புக்கையிலுள்ள ஊர்காவல்படை பயிற்சி முகா மில் பயிற்சியளிக்கப்படுகிறது.

## வடமராட்சி கிழக்கு மக்களுக்கு 650 தற்காலிக குடிசைகள்!

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை சர் வதேச செஞ்சிலுவைச் சங்கத் தின் உதவியுடன் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடமராட்சி கிழக்குப்பகுதி யில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கு அறுநூற்றைம்பது தற்காலிக வதிவிடக்குடிசை களை அமைத்து வருகின்றது.

கட்டிமுடிக்கப்பட்ட நானூற் றைந்து தற்காலிக வதிவிடக் குடிசைகளில் குடியேறியுள்ள குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள் வீட்டுப் பாவ னைப் பொருட்கள் வட மராட்சி கிழக்கு பிரிவு அலு வலகத்தில் வைத்து தைப் பொங்கல் தினத்தன்று வழங் கப்பட்டது. (27)

## இந்து விடுமுறைகள்!

வடபிராந்திய வர்த்தக ஊழியர்கள் சங்கம் வருடத் தில் வரும் போயா விடுமுறை களுக்குப் பதிலாகப் பன்னி ரெண்டு இந்து விடுமுறை தினங்களை வர்த்தக ஊழி யர்களுக்குரிய விடுமுறை தினங்களாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

இதன் ஒரு அங்கமாக யாழ். நகர வர்த்தக ஊழியர்க ளுக்கு நேற்று தைப்பூசத் தினத்தன்று விடுமுறை வழங் கப்பட்டிருந்தது.

தை மாதத்தில் வரும் விடு முறைக்குப் பதிலாக இந்த தைப்பூச விடுமுறை வழங்கப் பட்டது.

### கூட்டம்

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற் பகல் பத்து மணிக்கு நடை பெறவுள்ளது.

இயற்கையான தாவர உணவுகள் நன்மை பயக்கும். அவை ஆற்றலையும், சக்தியையும் அளிப்பவை. அவற்றில் உள்ள இயற்கையான நார்ப் பொருள்கள் இரத்தக் கொலஸ்ட்ரா லைக் குறைக்க உதவுகின்றன. தாவர வகையறாக்களில் கொலஸ்ட்ராலே கிடையாது. பழங்கள், காய்கறிகள், தானி யங்கள் போன்றவை கொலஸ்ட்ரால் அற்றவை.

இறைச்சி, வெண்ணெய், நெய், முட்டை போன்றவற்றை உண்ணும்போது அதிக அளவு கொலஸ்ட்ராலைப் பெறுகின் றோம்.

உணவு மூலம் பெறும் கொலஸ்ட்ராலைக் குறைத்துக் கொள்வதன் மூலம் இரத்தக் கொலஸ்ட்ராலின் அளவைக் குறைத்துக் கொள்ள முடியும்.

எனவே கொலஸ்ட்ராலைக் கட்டுப்படுத்துவதற்கு உணவு முறையினைக் கட்டுப்படுத்த வேண்டும். மருந்துகள் கடைசிக் கட்டத்துக்குத் தான் வரவேண்டும். ஆரோக்கியமாக வாழ்வ தற்கு இதுவே சிறந்த வழி.

நன்றி: நல்வழி

## மட்டு. வாவி படகு விபத்தில் தகப்பன் மகன் உட்பட மூவர் பலி

மட்டக்களப்பு வாவியில் பய ணிகள் சென்ற தோணி யொன்று கவிழ்ந்து விபத்துக் குள்ளாகியதில் மூவர் நீரில் மூழ்கி மரணமானார்கள். ஏனைய எட்டுப் பேர் தெய்வா தீனமாக உயிர் தப்பினர்.

இந்தவிபத்து பொங்கல்தின மான கடந்த புதன்கிழமை நிகழ்ந்தது.

மரணமானவர்களில் மண் டூர் மகாவித்தியாலய அதிபர் ஆ. பரமானந்தம், அவரது மகனான மட்டக்களப்புசென். மைக்கேல் கல்லூரி மாணவர் கமலஹாசன் ஆகியோரும் அடங்குவர்.

## புதிய இணை அதிபர்கள் விரைவில் நியமனமாவர்

யாழ் மாவட்ட பாடசா லைகளில் விரைவில் அமுல் செய்யப்படவுள்ள புதிய கொத்தணி முறைக்கு தகுதி யான கொத்தணி இணை அதிபர்களைத் தெரிவு செய் யும் நடவடிக்கைகள் தற் பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

கொத்தணி அதிபர்களாக கூடிய காலம் சேவையாற்றிய மூதலாகிதர அதிபர்கள் புதிதாக அமைக்கப்பட வுள்ள இரண்டு கொத்தணி கள் இணைந்த இந்த அமைப் பிற்கு இணை அதிபர்களாக நியமிக்கப்படவுள்ளனர். (20)

## கால் நடைவளர்ப்பிற்கு தலா 1000 ரூபா கடன்!

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு கால் நடை வளர்ப்பிற்கான குறு கிய கால திட்டக் கடனை வழங்கும் துரித நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவ டிக்கையாக எதிர்வரும் 5ஆம் திகதி 120 பேருக்கு தலா 1000 ரூபாவை கடனாக வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதனை அடுத்து வரும் ஒவ் வொரு மாதமும் இதே திகதி யில் அடுத்த 20 பேருக்கு இத்தொகை வழங்கப்பட வுள்ளது. (04)

● காலி கூட்டத்தில் காமினி ஜெயசூரியா:

# மலையக தமிழர்கள் ஒன்றிணைந்திருக்கும் போது சிங்களவர்கள் பிரிந்து இருக்கின்றனரே!

தொண்டமானின் சமரசத் திட்டத்தை அரசு அமுல் செய்தால் இலங்கை இரண்டாகப் பிளவுபடும்.

இவ்வாறுமுன்னாள் அமைச்சரும் சிங்கள பாதுகாப்பு சங்கத்தின் தலைவருமான காமினி ஜெயசூரியா காலியில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

தொண்டமானின் திட்டத்தால் சிங்களவர்களுக்கு வடக்கு கிழக்கில் எவ்வித உரிமைகளும் கிடைக்காது.

சிங்கள அரசர் காலத்தில் இருந்து ஆங்கிலேயர் இங்கு வரும்வரை இலங்கை ஒரு நாடு அதுவும் சிங்கள நாடு

ஆங்கிலேயர் காலத்தில் தமிழர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனர்.

இராணுவத்தில் 90வீதமான தமிழர்களைச் சேர்க்குமாறு தொண்டமானின் ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று வடக்கு கிழக்கில் இருந்து பல்லாயிரக்கணக்கான சிங்களவர்கள் கலைக்கப்பட்டுள்ளனர்

வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தேர்தல் காலத்தில் சிங்களவர்கள் அரசியல் ரீதியாகப் பிரிந்து இருக்கும் போது, மலையகத்தமிழர்கள் எல்லோரும் கட்சி பேதமின்றி தொண்டமானின் இ.தொ.காவுக்கே வாக்களித்தனர், இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## யாழ் குடாநாட்டில் மீண்டும் முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

மீண்டும் முத்திரைகளுக்கு யாழ்பாணத்தில் தட்டுப்பாடு நிலவுகிறது ஒரு சில தபாற்கந்தோர்களில் முத்திரைகள் அறவேயில்லை.

சில தபாற்கந்தோர்களில் 8 ரூபா முத்திரைகள் மாத்திரம் இருக்கின்றன.

அதே சமயம் தனியார் கடைகளில் எல்லா வகையான முத்திரைகளும் கூடிய விலைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியதாய் உள்ளது.

இதனால் பிறப்புச் சாட்சி. இறப்புச் சாட்சி பத்திரங்களைப் பெறவும், வேறு முக்கிய தேவைகளுக்கும் விலை கூடிய முத்திரைகள் இன்றி பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்,

5 ரூபாவுக்கு மேற்பட்ட முத்திரைகள் மேலதிகமாக 5 ரூபா கொடுத்து வாங்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 16,10

---

**பௌத்த—**

இத்தகவலை வாராந்த மந்திரிசபைக் கூட்டத்தில் வெளியிட்ட திரு திலகரட்னா 50,000க்குமேற்பட்டயாத்திரிகர்கள் இதனால் பயனடைவார்கள் என்றும் இந்தியாவிலுள்ள புனித ஸ்தலங்களை பௌத்தர்கள் குறைந்த செலவில் தரிசிக்க வாய்ப்பளிக்கும் என்று கூறினார்.

சமீபத்தில்இருநாட்டு வெளியுறவு மந்திரிகளிடையே டெல்கியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இந்த ஆலோசனை கூறப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

**மீண்டும்...**

குறிப்பிட்டுள்ள அமைச்சு அதிகாரியொருவர் விவசாயிகளை பாதுகாக்கவே ஊர் காவற்படை உள்ளது எனக் குறிப்பிட்டார்.

---

**அனுரா...**

இந்திய அரசாங்கத்தின் விருந்தினராகவே நீங்கள் தங்கியிருந்ததை நாம் நினைவில் கொள்ளவில்லை இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு உங்களிடம் மன்னிப்புக் கோருகிறோம் என ஹோட்டல் அசோக் அனுராவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

---

**கனேடிய...**

வடிக்கை குறித்து கனடா வரையறை செய்யமுடியும் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கனேடியக் குழுவினர், மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவை சந்திக்கவுள்ளது.

இதேவேளை இரண்டு கனேடிய உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வரவும் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

**அகதிகள்...**

பாதுகாப்பு அளிக்க வருகின்றனரா என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை

இதனிடையே நேற்று புறப்பட்ட இலங்கை அகதிகளில் அரைப்பங்கினர் அரச ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

இரண்டாம் கட்டமாக எதிர்வரும் 27ஆம்திகதி அகதிகள் சென்னையிலிருந்து புறப்படுவார்கள்

---

**நாவாந்துறை...**

பிடித்துச் செலப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக செல். நீர்கொழும்பு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், அரச அதிபரிடம் முறையிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இராணுவத்தால் பிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பது சம்பந்தமான முடிவு எதிர்வரும் 25 ஆம் திகதி வெளியாக இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 04

## நிதிக்கம்பனி மீது மத்திய வங்கி வழக்கு

கொழும்பிலுள்ள நிதிக்கம்பனி ஒன்றின் மீது மத்திய வங்கி கோட்டை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மத்திய வங்கியின் அனுமதியின்றி இரண்டு நாள்கள் இந்த நிதிக்கம்பனி மூடப்பட்டதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதிக்கம்பனி பணிப்பாளர்களை அடுத்த மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## தனித்தனியாக அகதிகளில் எயிட்ஸ் சோதனைசெய்ய முடியாது

இந்தியாவிலிருந்து திரும்பும் அனைத்து இலங்கை அகதிகளிலும் எயிட்ஸ் நோயுள்ளதா எனக்கண்டறிய பரிசோதனை செய்வது என்பது நடைமுறைச் சாத்தியமில்லை என இலங்கையின் எயிட்ஸ் பணியகப்பணிப்பாளர்டொக்டர் ஜோர்ஜ் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

சுமார் 30,000 பேர் தமிழ் நாட்டிலிருந்து திரும்புகின்றனர். இவர்களை தனித்தனியே பரிசோதிக்க முடியாது எனினும் அவர்களாக முன்வந்து தாமாக எயிட்ஸ் நோய் உள்ளதா என்று கண்டறிய பரிசோதனை செய்து கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

---

**கடற்படை...**

தாகவும் இவர்களின் இப்படகுகள் குறித்த விவர அறிக்கை இவ்வாரம் ஸ்ரீலங்கா கடற்படையிடம் வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே இரு சீன பொறியியலாளர்கள்கடற்படைபடகுகளை பார்வையிட வந்தும் கோளாறை கண்டுபிடிக்க முடியாது சீனா திரும்பியதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

---

**கிரான்குளம்...**

பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன,

நீதிபதி ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

---

**பொலிஸாரின்...**

தாம்.

யாழ்ப்பாணத்தில் வழமை நிலை திரும்பியதுமே உறவினர்கள் செல்ல அனுமதிக்கப்படுவர் என செஞ்சிலுவை அதிகாரிகளிடம் கூறப்பட்டதாம்.

---

**இந்திய..**

## ஏ. எஸ். பி. பதவி தெரிவில் பாரபட்சம் எனப் புகார்

அண்மையில் தெற்கில் நடைபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர்களை ஏ. எஸ். பியாக பதவி உயர்த்தும் நேர்முகப் பரீட்சையில் பாரபட்சம் காட்டப்பட்டதாக பலத்த புகார்கள் எழும்பியுள்ளன

முக்கிய அரசியல் வாதிகளுக்கு மெய்பாதுகாவலராக இருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

300 பொலிஸ இன்ஸ்பெக்டர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர் இவர்களில் 211 பேர் முதல் கட்ட தெரிவாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள போதிலும் இவர்களில் எவருமே அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் என ஏனைய பொலிஸ அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

---

**என்...**

லவித் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ் விடயம் குறித்து பத்திரிகைகளுக்குத் தெரிவித்த அவர் தனது தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுவதாகவும் மாறு வேடத்தில் ஆக்குழுவைச் சேர்ந்தவர்கள் தன் நடவடிக்கைகளை வேவு பார்ப்பதாகவும் கூறிய அவர் சிலர் தனது கட்சி அங்கத்த

## கொழும்பில் கைது

தீவிரவாத தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஏழு தமிழ் இளைஞர்கள், தெஹிவளை, மட்டக்குளி. கோட்டை ரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## 84 மாணவிகள் பல்கலை. அனுமதி

பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியில் 1990-ம் ஆண்டு க. பொ. த (உயர்) தரப்பரீட்சைக்குத் தோற்றிய 96 மாணவிகளில் 84 மாணவிகள் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர். 11

## கூட்டம்

நாளை பகல் 12 மணிக்கு யாழ் கூட்டுறவுச் சபைமண்டபத்தில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது இதில் அனைவரையும் தவறாது சமூகம் தரும்படி யாழ் மாவட்ட கூட்டுறவுப்பிரிவினர் கேட்டுள்ளனர்.

## சான்றிதழ் வழங்கல்

யாழ் கல்விக்கோட்டத்தால் நடத்தப்பட்ட ஆரம்பக்கல்வி சேவைக்காலப் பயிற்சி வகுப்பில் பங்கு கொண்டோருக்கான கொடுப்பனவுகள், சான்றிதழ்கள் யாழ் மத்திய கல்லூரியில் 22ஆம் திகதி புதன் கிழமை பி. ப. 2மணிக்கு நிகழும் வைபவமொன்றில் வழங்கப்படும் என்று யாழ் - கோட்டப்பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

---

**ஷெல்..**

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய்ட்புரத்திலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வரும் கந்தப்பிள்ளை முரு

O/L

# O/L

## க. பொ. த. சாதாரணதரம்

(ஆண்டு II)

★ பகல் முழு நேர வகுப்புகள்
★ சனி, ஞாயிறு வகுப்புகள்
★ மீட்டல் வகுப்புகள்

ஆரம்பம்

25 - 01 - 92

(சனி காலை 7-45 மணி)

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

இதை விடத் தெரிவு......
வேறேதுமில்லை!

01055



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பித்த சகலரும் 1992-01-23 ஆம் திகதி மு. ப. 9-00 மணிக்கு பல்கலைக் கழக சபை அறையில் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தற்காலிக செய்முறை காட்டுநர்.

உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / மருந்தியல் / சட்டமருத்துவம் / நோயியல் / அறுவைமருத்துவம் / மருத்துவம். / குழந்தை மருத்துவம் / மனநோய் மருத்துவம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-01-20

01054


படுவர் என செஞ்சிலுவை அதிகாரிகளிடம் கூறப்பட்டதாம்.

---

### இந்திய..

சிகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது கொழும்புக்கும் தமிழ் நாட்டுக்குமிடையிலான விமான சேவைக்கு விமானப் படைக்குச் சொந்தமான இரு அவ்ரோ விமானங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. 10

---

### உதவி...

வார்த்தை நடத்துமாறு சர்வதேச நாடுகளும் எம் மீதும் ஸ்ரீலங்கா அரசு மீதும் நெருக்குதல் கொடுக்கின்றன. இதற்கு மத்தியஸ்தம் வகிக்க சுவீடன். அவுஸ்திரேயா, சுவிஸ்லாந்து கனடா ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தை அவதானித்து வருகிறோம் எனக் குறிப்பிட்ட திலகர் தொண்டமானின் சமரஸத்திட்டத்துக்கு சிங்கள பேரினவாதிகள் காட்டும் எதிர்ப்புக் குறித்து கேட்ட போது இது ஒன்றும் புதிதல்ல 1958 இல் இருந்து இதுதான் நடைபெறுகிறது என்றார். 10

வைச் சேர்ந்தவர்கள் தன் நடவடிக்கைகளை வேவு பார்ப்பதாகவும் கூறிய அவர் சிலர் தனது கட்சி அங்கத்தவர்கள் போன்று பாசாங்கு செய்தும் வேவு பார்ப்பதாகக் குற்றம் சாட்டினர்.

இள்ளனர்.

மாவிட்டபுரத்திலிருந்து இடம்பெயர்ந்து வசித்து வரும் கந்தப்பிள்ளை முருகையா (52), முருகையா ஆனந்தசிவம்(18) ஆகியோரே காயப்பட்டவர்களாவர். (07)


புதிய பிரிவு

## கணக்கியல்

திரு. S. K. பிரபாகரன்

A/L 93 செவ்வாய், வியாழன் 3-4
A/L 92 செவ்வாய், வியாழன் 4 5

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

01056



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 21-01-1992 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது